# ஆதிபுரீஸ்வரர் வெள்ளிக்கவசம் திறப்பு: ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் தரிசனம்

**திருவொற்றியூர், நவ.18:** திருவொற்றியூர் தியாகராஜர் கோயிலில் அமைந்துள்ள ஆதிபுரீஸ்வரர் மீதான வெள்ளிக்கவசம் வியாழக்கிழமை திறக்கப்பட்டது. இதில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு ஆதிபுரீஸ்வரரைத் தரிசனம் செய்தனர்.

சுயம்புவாக உருவானதாகக் கருதப்படும் ஆதிபுரீஸ்வரர் ஆண்டு முழுவதும் வெள்ளிக்கவசத்தால் மூடப்பட்ட நிலையில்தான் பக்தர்கள் தரிசனம் செய்வார்கள். ஆண்டுதோறும் கார்த்திகை மாதம் பவுர்ணமியை ஒட்டி மூடப்பட்டிருக்கும் வெள்ளிக்கவசம் மூன்று நாள்களுக்கு மட்டும் திறந்து வைக்கப்படும். இந்த ஆண்டும் கார்த்திகை பவுர்ணமியையொட்டி வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு கவசம் திறக்கப்பட்டு சிறப்பு அபிஷேகங்கள் நடைபெற்றன. வியாழக்கிழமை இரவு தியாகராஜசுவாமி நான்கு மாடவீதிகளில் உலா வரும் நிகழ்ச்சி நடைபெற்றது.

வெள்ளிக்கிழமை, சனிக்கிழமை ஆகிய இரு நாள்களில் பொதுமக்கள் தரிசனத்துக்குத் திறந்து வைக்கப்பட்டு சனிக்கிழமை 8 மணியளவில் நடைபெறும் அர்த்தஜாம பூஜைக்குப் பிறகு வெள்ளிக் கவசம் ஆதிபுரீஸ்வரர் மீது மீண்டும் மூடப்படும்.

கோயில் உதவி ஆணையர் கே.சித்திராதேவி தலைமையில் நடைபெற்ற கவசம் திறப்பு நிகழ்ச்சியில் தெலங்கானா மாநில ஆளுநர் டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தார். அவருக்கு கோயில் நிர்வாகம் சார்பில் சிறப்பு மரியாதை அளிக்கப்பட்டது. கவசம் திறக்கப்பட்ட முதல்நாள் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் வரிசையில் காத்திருந்து ஆதிபுரீஸ்வரரை தரிசனம் செய்தனர்.

# தமிழகத்தில் பொதுத்தேர்வுகள் தள்ளிப்போக வாய்ப்பு

**சென்னை,நவ.18:** தமிழகத்தில் நிகழ் கல்வியாண்டுக்கான பாடங்களை முடிப்பதற்காக பத்தாம் வகுப்பு, பிளஸ் 1, பிளஸ் 2 பொதுத் தேர்வுகளை வரும் மார்ச், ஏப்ரல் மாதங்களில் நடத்தாமல், மே முதல் வாரத்தில் நடத்த பள்ளிக் கல்வித் துறை முடிவு செய்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

தமிழகத்தில் கரோனா தொற்று காரணமாக ஒன்றரை ஆண்டுகளுக்கும் மேலாகப் பள்ளிகளில் நேரடி வகுப்புகள் நடைபெறாமல் இருந்தன. ஒவ்வொரு கல்வியாண்டிலும் ஜூன் மாதத்தில் வழக்கமாகப் பள்ளிகள் திறக்கப்படும். கரோனா இரண்டாவது அலையின் காரணமாக நிகழ் கல்வியாண்டிற்கான வகுப்புகள் இரு கட்டங்களாகத் திறக்கப்பட்டன.

ஒன்பது முதல் பிளஸ் 2 வகுப்புகள் வரை கடந்த செப்டம்பர் 1-ஆம் தேதியிலிருந்தும், அடுத்தகட்டமாக ஒன்று முதல் 8-ஆம் வகுப்புகள் வரை நவம்பர் 1-ஆம் தேதியிலிருந்தும் நேரடி வகுப்புகள் தொடங்கப்பட்டன.

தற்போது வடகிழக்குப் பருவமழை காரணமாக பள்ளிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டு, தொடர்ச்சியாக வகுப்புகளை நடத்த இயலாதநிலை, மாணவர்களுக்குப் பாடங்களை முழுமையாக நடத்த முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் நிகழ் கல்வியாண்டுக்கான பொதுத்தேர்வுகளை மார்ச், ஏப்ரல் மாதங்களில் நடத்துவதற்குத் தேவையான ஏற்பாடுகளை அரசுத் தேர்வுத் துறை மேற்கொண்டு வருகிறது. இருப்பினும் மாணவர்களுக்கு உரிய பாடங்களை நடத்தி முடிக்கப் போதுமான கால அவகாசம் இல்லை என கூறப்படுகிறது.

எனவே, மாணவர்கள் பத்தாம் வகுப்பு, பிளஸ் 1, பிளஸ் 2 பொதுத் தேர்வுக்குத் தயாராவதற்குவசதியாக இரண்டு மாதங்கள் தள்ளிவைத்து பொதுத்தேர்வு நடத்த முடிவுசெய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. அதன்படி மார்ச், ஏப்ரல் மாதங்களுக்கு பதிலாக, மே மாதம் முதல் வாரத்தில் பொதுத்தேர்வை நடத்த முடிவுசெய்யப்பட்டுள்ளதாகப் பள்ளிக் கல்வித் துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.




புனரமைத்து சில நாள்களிலேயே சேதமடைந்து காணப்படும் ஒரகடம் தாமரைக்குளம். (வலது) பட்டரவாக்கம் பெரியகுளத்தில் சேதமடைந்துள்ள நடைப்பயிற்சி பாதை.
படம் உ.ச.சாய் வெங்கடேஷ்

# புனரமைத்த சில நாள்களில் சேதமடைந்த குளங்கள்

## மாநகராட்சி நிதி ரூ.6.30 கோடி வீண்

ம.பாவேந்தன் இளையபதி

**சென்னை, நவ.18:** சென்னை மாநகராட்சியின் அம்பத்தூர் மண்டலத்தில் ரூ. 6.30 கோடி செலவில் புனரமைக்கப்பட்டு இன்னும் திறக்கப்படாத நிலையில், இரு குளங்கள் சேதமடைந்துள்ளன. இதனால், மாநகராட்சியின் பல கோடி ரூபாய் நிதி வீணாகி உள்ளதாக சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

சென்னையில் மாநகராட்சியின் மழைநீர் வடிகால் துறை கட்டுப்பாட்டின்கீழ் 15 மண்டலங்களில் 210 நீர்நிலைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

இந்த நீர்நிலைகளை புனரமைக்கும் வகையில் அவற்றைத் தூர்வாரி சுற்றுச்சுவர், நடைப்பயிற்சிக்கான பாதை, விளையாட்டு உபகரணங்கள், உடற்பயிற்சி உபகரணங்கள் அமைக்கும் பணி கடந்த சில ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது.

இதில், மாநகராட்சியின் இணைக்கப்பட்ட பகுதியான அம்பத்தூர் மண்டலத்தில் மட்டும் 32 குளங்கள் மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் உள்ளன. இதில், ஒரகடம் வார்டு 79-இல் கணபதி நகரில் 5.8 ஏக்கர் பரப்பளவில் உள்ள தாமரைக்குளம் ரூ. 4.04 கோடி செலவிலும், பட்டரவாக்கம் வார்டு 84-இல் 3.2 ஏக்கர் பரப்பளவில் உள்ள பட்டரவாக்கம் பெரிய குளம் ரூ. 2.25 கோடி செலவிலும் புனரமைக்கும் பணிகள் கடந்த 2019-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

மேலும், மேனாம்பேடு தாங்கல் குளம் பட்டரவாக்கம் ஆரா குளம், மேனாம்பேடு வண்ண குளம் ஆகியவை ரூ. 3.87 கோடியிலும், கொரட்டூர் பெருமாள் கோயில் குளம், தத்தான் குப்பம் குளம் ரூ. 2.73 கோடியிலும், அம்பத்தூர் மண்டல அலுவலகத்தில் உள்ள குளம் ரூ.2.20 கோடியிலும், கொரட்டூர் தாங்கல் ஏரி ரூ. 8.63 கோடி செலவிலும் என மொத்தம் 12 குளங்கள் புனரமைக்கத் திட்டமிடப்பட்டன.

அதில், தற்போது 6 குளங்கள் புனரமைக்கப்பட்டுள்ளன. 6 குளங்களின் புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்நிலையில், தாமரைக்குளம், பட்டரவாக்கம் பெரிய குளம் புனரமைக்கப்பட்டு, திறக்கப்படாத நிலையில் அவை சேதமடைந்துள்ளன.

**வீணான நிதி:** இதுகுறித்து சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கூறுகையில், இந்த இரு குளங்களைப் புனரமைக்கும் பணி 2019-இல் தொடங்கப்பட்டு கடந்த சில மாதங்களுக்கு முன் முடிக்கப்பட்டது. இந்நிலையில், அண்மையில் பெய்த ஒரு மழைக்கே கான்கிரீட்டால் அமைக்கப்பட்ட குளக் கரைகள், நடைப்பயிற்சி பாதைகள் சேதமடைந்துள்ளன.

மக்கள் பயன்பாட்டுக்கு முன்பே கரைகள் சேதமடைகின்றன என்றால் குளங்கள் புனரமைப்பு பணி எவ்வாறு நடைபெற்றுள்ளது என்பது தெளிவாக தெரிகிறது. மேலும், இக்குளங்களில் நீர்வரத்து கால்வாய்கள் மட்டும் அமைக்கப்பட்டுள்ளன. நீர் வெளியேறும் கால்வாய்கள் அமைக்கப்படவில்லை. தாமரைக்குளத்தில் அருகில் உள்ள வீடுகளின் சாக்கடை, மாட்டுக் கொட்டகையின் கழிவுநீர் நேரடியாக கலக்கிறது. ஒப்பந்ததாரர்கள் புனரமைப்பு பணிகளை முறையாக மேற்கொள்கிறார்களா என்பதை மாநகராட்சி அதிகாரிகள் கண்காணிக்காததே இதற்கு காரணம் என்றனர்.

இதுகுறித்து அம்பத்தூர் மண்டல மாநகராட்சிப் பொறியாளர்கள் கூறுகையில், இந்த இரண்டு குளங்களின் மண் உறுதித்தன்மை குறைவாக உள்ளது. இதனால், அவற்றின் கரைகள் சேதமடைந்துள்ளன. ஒப்பந்ததாரர்களிடம் தெரிவித்து இடிந்துள்ள கரைகள், நடைப்பயிற்சி பாதைகள் விரைவில் சரி செய்யப்படும் என்றனர்.

# கரோனா: மேலும் 775 பேருக்கு பாதிப்பு



**சென்னை, நவ.18:** தமிழகத்தில், வியாழக்கிழமை மேலும் 775 பேர் கரோனா நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதில் அதிகபட்சமாக சென்னையில் 126 பேருக்கும், கோவையில் 112 பேருக்கும், ஈரோட்டில் 76 பேருக்கும் பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் மாநிலத்தில் இதுவரை கரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 27 லட்சத்து 17,978- ஆக அதிகரித்துள்ளது.

அதே நேரம், வியாழக்கிழமை நிலவரப்படி 9,078 பேர் கரோனா பாதிப்புக்குள்ளாகி சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதனிடையே, நோய்த் தொற்றிலிருந்து வியாழக்கிழமை 896 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். இதையடுத்து மாநிலத்தில் இதுவரை கரோனாவிலிருந்து விடுபட்டோரின் எண்ணிக்கை 26.72 லட்சத்தைக் கடந்துள்ளது.

மற்றொருபுறம், தமிழகத்தில் கரோனா பாதிப்புக்குள்ளாகி மேலும் 12 பேர் பலியானதை அடுத்து மாநிலம் முழுவதும் இதுவரை நோய்த் தொற்றால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 36,336-ஆக அதிகரித்துள்ளது.


isarc

இந்திய SME அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிமிட்டெட்
(பெருநிறுவன அடையாள எண்: U67190MH2008PLC181062)
பதிவு அலுவலகம்: ஸ்வவலம்பன் பவன், C-11, G-பிளாக், பாந்த்ரா-குர்லா வளாகம், பாந்த்ரா (கிழக்கு), மும்பை – 400 051., தொலைபேசி: 022-6753 1389,
மின்னஞ்சல்: isarc@isarc.in, இணையத்தளம்: www.isarc.in

E-ஏல விற்பனை அறிவிப்பு
[விதி 6(2) & 8(6) ஆகியவற்றின் கீழ்]

ISARC-FA-16-I/2011-12 டிரஸ்ட்டின் டிரஸ்ட்டி எனும் முறையில் டிரிபியூன் டெக்ஸ்டைல்ஸ் பிரைவேட் லிமிட்டெட் தொடர்பான நிதிச் சொத்துக்கள் தொடர்பாக.
இதன் மூலம் பொதுமக்களுக்குப் பரவலாகவும் கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்குக் குறிப்பாகவும் அறிவிப்பது யாதெனில், ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனத்திடம் அடமானம் / அடகு வைக்கப்பட்டுள்ளவையும் கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 (SARFAESI) மற்றும் அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதிகள் 8 & 9 ஆகியவற்றின் கீழுள்ள உரிமைகளைப் பயன்படுத்தி ISARC-இன் (ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனம்) அதிகாரப்பூர்வ அலுவலரால் நேரடி சுவாதீனம் செய்யப்பட்டுள்ளவையுமான கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்கள் e-டெண்டர்களை வரவேற்பதன் மூலம் "உள்ளது உள்ள இடத்தில்", "உள்ள இடத்தில் உள்ள அனைத்தும்", "திரும்பப் பெறப்பட மாட்டா" எனும் முறையில் வில்லங்கங்கள் ஏதும் இருப்பின் அவற்றுடன் சேர்த்து விற்பனை செய்யப்பட உள்ளன.

| | |
|---|---|
| கடன்தாரர் பெயர் | டிரிபியூன் டெக்ஸ்டைல்ஸ் பிரைவேட் லிமிட்டெட் |
| ஜாமீன்தாரர்கள் மற்றும் அடமானதாரர்கள் பெயர் | 1. திரு.G.சுரேந்திர குப்தா<br>2. திருமதி G.சுனிதா குப்தா |
| நிலுவை விவரங்கள் | 30.09.2017 நாள்படி ரூ.26,83,43,214/- (ரூபாய் இருபத்தாறு கோடியே எண்பத்து மூன்று இலட்சத்து நாற்பத்து மூன்றாயிரத்து இருநூற்றுப் பதினான்கு மட்டும்) இத்துடன் SARFAESI சட்டம், பிரிவு 13(2)-இன் கீழான அறிவிப்பின்படி அதன் மேல் வட்டி மற்றும் இதர செலவினங்களுடன் சேர்த்து. |
| விற்கப்பட உள்ள சொத்துக்கள் / சொத்து விவரங்கள் | சொத்து விவரம்<br>தொழிற்சாலை நிலம் மற்றும் கட்டடம், சர்வே எண் 284/2, நிலத்தின் பரப்பளவு 5.09 ஏக்கர், சேனபுத்தூர் கிராமம், கும்மிடிப்பூண்டி வட்டம், திருவள்ளூர் மாவட்டம். |
| குறைந்தபட்ச விலை மற்றும் டேவணித்தொகை (EMD) | குறைந்தபட்ச விலை (R.P) ரூ.1,19,98,620/- டேவணித்தொகை (EMD) ரூ.11,99,862/-<br>டேவணித்தொகையானது குறைந்தபட்ச விலையில் 10% ஆகும். ஆர்வமுள்ள ஏலதாரர் / வாங்குநர் / பெறுநர் குறைந்தபட்ச விலைக்குக் குறைவாக சமர்ப்பிக்கும் ஏலக்கோரல் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. ஏல உயர்வுத் தொகை ரூ.50,000/- |
| இடத்தைப் பார்வையிடும் நாள் மற்றும் நேரம் | டிசம்பர் 7, 2021 அன்று முற்பகல் 11 மணிக்கும் பிற்பகல் 3 மணிக்கும் இடையில் |
| விலைகோரல் சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள், நேரம் மற்றும் இடம் | டிசம்பர் 9, 2021 அன்று மாலை 04.00 மணி - இணையவழி முறையில் மட்டும் |
| E-ஏல நாள் மற்றும் நேரம் | டிசம்பர் 10, 2021 அன்று முற்பகல் 11.00 மணி முதல் நண்பகல் 12 மணி வரை, தலா 5 நிமிடம் எண்ணிக்கை வரம்பற்ற காலநீட்டிப்புடன். ஏலத்தை "இணைய வழியில்" நடத்துவோர் E-புரொக்யூர்மெண்ட் டெக்னாலஜிஸ் லிட்., வால் ஸ்ட்ரீட், ஓரியண்ட் கிளப் எதிரில், குஜராத் கல்லூரி சாலை அருகில், எல்லிஸ்பிரிட்ஜ், அஹமதாபாத், அஞ்சல் குறியீடு: 380006, உதவித் தொலைபேசி எண்: +91-68136851 மற்றும் அலைபேசி எண்: +91-9978591888. உதவி மின்னஞ்சல் முகவரி: support@auctiontiger.net, இணையத்தளம்: https://www.sarfaesi.auctiontiger.net |
| இதர விவரங்கள் | www.isarc.in & https://www.bankeauctions.com இணையத்தளத்திலிருந்து இதர விவரங்களுடன் கூடிய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளைத் தரவிறக்கம் செய்து கொள்ளலாம். |

நாள்: 19.11.2021
இடம்: மும்பை
ஒ/ம்-
அதிகாரப்பூர்வ அலுவலர்
இந்திய SME அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிமிட்டெட்
ISARC FA-16-I/2011-12 டிரஸ்ட்டின் டிரஸ்ட்டி எனும் முறையில்



தமிழ்நாடு அரசு- இந்து சமய அறநிலையத்துறை
அருள்மிகு பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் திருக்கோயில்
திருமலைவையாவூர், மதுராந்தகம் வட்டம், செங்கல்பட்டு மாவட்டம்.

பலவகை இனங்கள் விற்பனை உரிமம் டெண்டர்/பொது ஏல விளம்பரம்

| வ.எண் | இனங்கள் விபரம் | டெபாசிட் தொகை |
|---|---|---|
| 1. | பிரசாத கடை நடத்தும் உரிமம் | ரூ.325000.00 |
| 2. | சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் விற்பனை உரிமம் | ரூ.22000.00 |
| 3. | முடி சேகரம் செய்யும் உரிமம் | ரூ.195000.00 |

செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டம், திருமலைவையாவூர், அருள்மிகு பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் திருக்கோயிலில் மேற்கண்ட இனங்களுக்கு டெண்டர்/பொது ஏல விவரங்களுக்கான விற்பனை உரிமம் டெண்டர்/பொது ஏலம் பசலி 1431-க்கு மட்டும் 03.12.2021 அன்று காலை 10.45 வரை பெறப்பட்டு, அன்றே 11.00 மணியளவில் செங்கல்பட்டு உதவி ஆணையர் மற்றும் இலாக்கா அலுவலர்கள், வரப்பெற்ற டெண்டர்தாரர்கள், பொது ஏலதாரர்கள் முன்னிலையில் மேற்படி திருக்கோயில் வளாகத்தில் நடைபெறவுள்ளது. தேவையுள்ளவர்கள் கலந்து கொள்ளலாம். நிபந்தனைகள் திருக்கோயில் அலுவலகத்தில் கேட்டு தெரிந்து கொள்ளவும்.

நாள்:18.11.2021
வெ.ஆ.எண்.093/செ.ம.தொ.அ/2021, சங்கல்பட்டு
செயல் அலுவலர்,
அருள்மிகு பிரசன்ன வெங்கடேச பெருமாள் திருக்கோயில்,
திருமலைவையாவூர்-603 308, செங்கல்பட்டு மாவட்டம்.

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"



SOUTH INDIAN Bank

பிராந்திய அலுவலகம் :
எண்.43, தரைத் தளம், ஹமீதியா சென்டர், ஹாடோஸ் ரோடு,
நுங்கம்பாக்கம்,சென்னை-600 006.
போன் : +91-44-28238250/ 2828109
E-mail : ro1005@sib.co.in

சொத்து வசப்படுத்துதலுக்கான அறிவிப்பு
[விதி 8(1)ல் காண்க] (அசையா சொத்திற்காக)

தி சௌத் இந்தியன் பேங்க் லிட்.-ன் அதிகாரம் பெற்ற மற்றும் கீழே கையொப்பம் செய்துள்ள அலுவலர் செக்யூரிடைசேஷன் மற்றும் ரீகன்ஸ்ட்ரக்ஷன் ஆப் பைனான்சியல் அசெட்ஸ் மற்றும் என்போர்ஸ்மெண்ட் ஆப் செக்யூரிட்டி இன்டரஸ்ட் ஆக்ட் 2002-ன்படி செக்யூரிட்டி இன்டரஸ்ட் (என்போர்ஸ்மெண்ட்) விதிகளில் சட்டப்பிரிவு 13(12) உடன் கூடிய விதி 3-ன்படி, சட்டப்பிரிவு 13(2)ன் கீழ் அறிவிப்பு நோட்டீஸ் கடந்த 13.07.2021 அன்று கடன்தாரர்கள் : 1)திரு.அஸ்கர் ஷெரீஃப், த/பெ.உமர் ஷெரீஃப் மற்றும் 2)திருமதி.ஜோஹருன்னிஷா.J, க/பெ.அஸ்கர் ஷெரீஃப் இருவருக்கும் பொது வசிப்பிட முகவரி : எண்.17/20, B.V.நகர், 6வது வீதி, நங்கநல்லூர், காஞ்சீபுரம் – 600 061 ஆகியோர்களின் திருப்பிச் செலுத்த வேண்டிய அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை ரூ.48,88,275.54 (ரூபாய் நாற்பத்து எட்டு லட்சத்து எண்பத்து எட்டாயிரத்து இருநூற்று எழுபத்து ஐந்து மற்றும் பைசா ஐம்பத்து நான்கு மட்டும்) மற்றும் கூடியுள்ள வட்டி, செலவுகளுடன் நோட்டீஸ் பெற்ற 60 நாட்களுக்குள் செலுத்துமாறு நோட்டீஸ் தரப்பட்டது.
ஆனால் மேற்படி கடன் தொகையைக் கடன்பெற்றவர்கள் வங்கிக்குத் திருப்பிச் செலுத்தத் தவறிவிட்டதால் 2002 செக்யூரிட்டி இன்டரஸ்ட் (என்போர்ஸ்மெண்ட்) விதிகளில் சட்டப்பிரிவு 13(4) மற்றும் அதற்குரிய விதி 8 இதர விதிகளின்படி அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி கீழே கையொப்பமிட்டவர் 16.11.2021ல், கீழே விவரித்துள்ள சொத்தினை அடையாள சுவாதீனம் செய்து கொண்டுள்ளார் என்று கடன் பெற்றவர்களுக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.
எனவே, குறிப்பாக கடன் பெற்றவர்களுக்கும் மற்றும் பொதுமக்களும் இந்த சொத்தின் பேரில் எவ்வித ஒப்பந்தங்களும் செய்து கொள்ளக் கூடாதென்றும், அவ்வாறு செய்து கொள்ளும் ஒப்பந்தங்கள் தி சௌத் இந்தியன் பேங்க் லிமிடெட்டுக்கு செலுத்த வேண்டிய ரூ.50,73,202.56 (ரூபாய் ஐம்பது லட்சத்து எழுபத்து மூன்றாயிரத்து இருநூற்று இரண்டு மற்றும் பைசா ஐம்பத்து ஆறு மட்டும்) 15.11.2021 தேதி வரை மற்றும் கூடியுள்ள வட்டித் தொகையையும், செலவுகளையும் உள்ளடக்கியதாகவே இருக்கும் என்று இதன் மூலம் எச்சரிக்கப்படுகிறார்கள்.
பிணையம் வைத்துள்ள சொத்துக்களை மீட்பதில் உள்ள கால அவகாசத்தைக் கருத்தில் கொள்ள இச்சட்டத்தின் உட்பிரிவு (8) பிரிவு 13க்கு, கடன்பெற்றவர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

அசையாச் சொத்து விபரம்
காஞ்சீபுரம்மாவட்டம்,செங்கல்பட்டுதாலூகா,எண்.12,ஊனமாஞ்சேரிகிராமத்தில் பழைய க.ச.எண்.54/3ல் பட்டா எண்.5953ன் படி புதிய க.ச.எண்.54/6ல் அடங்கியதும் அதன் பகுதியுமான 1200 சதுர அடி நிலத்தில் பிரிபடாத பங்கான 600 சதுர அடி நிலமும், அந்நிலத்தில் கட்டப்பட்டுள்ளதும் சந்திராபுரம் லே அவுட் மனை எண்.61–பேயில் B பிளாக்கின் தரைதளத்தில் உள்ள 1020 சதுர அடி கட்டுமானப் பரப்புடைய கட்டிடமும், அதன் பாதுகாக்கப்பட்ட ஒரு கார் நிறுத்தமும் அதன் அனைத்து இணைப்பு உரிமைகளும், அபிவிருத்திகளும் சேர்ந்த சொத்து. திரு.அஸ்கர் ஷெரீஃப் பெயரிலுள்ள இச்சொத்தின் மேல்விவரங்கள் தென்சென்னை பதிவு மாவட்டம், கூடுவாஞ்சேரி சார்பதிவகத்தில் பதியப்பட்ட 6641/2019 என்ற கட்டுமான ஒப்பந்தத்தின் அட்டவணையிலும் மற்றும் 24.05.2019 அன்று பதியப்பட்ட ஆவண எண்.6642/2019 என்ற விற்பனைப் பத்திர ஆவணத்திலும் விரிவாக உள்ளன. கட்டிடம் உள்ள முழுநிலத்தின் எல்லைகள் வருமாறு : வடக்கே : 23 அடி ரோடு மற்றும் 10 அடி தடம், தெற்கே : மனை எண்.54, கிழக்கே : மனை எண்.60, மேற்கே : மனை எண்.62.

தேதி : 16.11.2021
இடம் : சென்னை
அங்கீகரிக்கப்பட்ட அலுவலர்
தி சௌத் இந்தியன் பேங்க் லிட்.

தி சௌத் இந்தியன் பேங்க் லிட். பதிவு அலுவலகம் : 'SIB ஹவுஸ்', T.B.ரோடு, மிஷன் குவார்ட்டர்ஸ், திருச்சூர் -680001, கேரளா. போன் : +91-487-2420020, பேக்ஸ் : +91-487-2442021, இ-மெயில் : sibcorporate@sib.co.in இணைய தளம் : www.southindianbank.com
CIN : L65191KL1929PLC001017



earc

என்கோர் அஸட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி பிரைவேட் லிமிட்டெட் (என்கோர் ARC)
(EARC-Bank-019-Trust ன் அறங்காவலர் என்ற தகுதியில் செயல்படுவது)
பெருநிறுவன அலுவலக முகவரி : 5வது தளம், ப்ளாட் எண். 137, செக்டார் 44, குருக்ராம் - 122022, ஹரியானா

மின்னணு ஏலத்துக்கான பொது அறிவிப்பு

பிணைக்காப்பு, நிதிச்சொத்து மறுசீரமைப்பு, பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) சட்டம் '2002 - உடன் படிக்க - பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) விதிகள்' 2002 (விதிகள்)ன் விதி 8 (6) & 9(1)க்கான விதி விலக்கு-ன் கீழ் அசையா சொத்துக்களுக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு
இதன் மூலம் பொது மக்களுக்கும், குறிப்பாக கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(களுக்கும்) அறிவிக்கப்படுவது யாதெனில், EARC-Bank-019-Trust ன் அறங்காவலர் என்ற தகுதியில் செயல்படும் என்கோர் ARC (ஜாமீன் பெற்று கடனளித்தவர்) - க்கு ஒப்படைவு செய்யப்பட்ட கடன் கணக்கின் நிலுவைகளுக்கான ஜாமீனாக, கரூர் வைஸ்யா வங்கிக்கு அடமானம் / கடன் பொறுப்பு ஏற்படுத்தப்பட்டு, கரூர் வைஸ்யா வங்கியின் அதிகாரப்பூர்வ அலுவலரால் சுவாதீனம் எடுக்கப்பட்ட இதன் கீழ் விவரிக்கப்பட்ட அசையா சொத்துக்கள், ஜாமீன் பெற்று கடனளித்த என்கோர் ARC க்கு
1. M/s. லட்சுமி ராஜ் எண்டர்ப்ரைசஸ் (கடன்தாரர்) அதன் உரிமையாளர் திருமதி. P.S. ராஜலட்சுமி என்பவரால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறது., (2). திருமதி. P.S. ராஜலட்சுமி (உரிமையாளர்), (3). திருமதி M ஹமீதா (ஜாமீன்தாரர்), (4). திரு. A இர்ஃபான் ஹஃபீஸ் (ஜாமீன்தாரர்), (5). திருமதி. சுசீலா S (ஜாமீன்தாரர்), (6). திரு.ஸ்ரீனிவாசன் N.S (ஜாமீன்தாரர்), (7). திரு. மொஹம்மத் இப்ராஹிம் (ஜாமீன்தாரர்) ஆகியோரிடமிருந்து 31.10.2021ம் தேதியின் படி வர வேண்டிய நிலுவைத்தொகை ரூ.3,49,31,650.67/- (ரூபாய். மூன்று கோடியே நாற்பத்து ஒன்பது இலட்சத்து முப்பத்து ஓராயிரத்து அறுனூற்று ஐம்பது மற்றும் பைசா அறுபத்து ஏழு மட்டும்) மற்றும் 01.11.2021ம் தேதி முதல் ஒப்பந்த வீதத்தில் வசூலிக்கப்படும் வரை மேற்கொண்டு வரும் வட்டி, இதர செலவுகள் மற்றும் கட்டணங்கள்
2. M/s. ஸ்ரீ வடிவுடையாள் எண்டர்ப்ரைசஸ் (கடன்தாரர்) அதன் உரிமையாளர் திருமதி. M ஹமீதா என்பவரால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறது., (2). திருமதி. M ஹமீதா (உரிமையாளர்), (3). திருமதி P.S. ராஜலட்சுமி (ஜாமீன்தாரர்), (4). திரு. A இர்ஃபான் ஹஃபீஸ் (ஜாமீன்தாரர்), (5). திருமதி. சுசீலா S (ஜாமீன்தாரர்), (6). திரு.ஸ்ரீனிவாசன் N.S (ஜாமீன்தாரர்), (7). திரு. மொஹம்மத் இப்ராஹிம் (ஜாமீன்தாரர்) ஆகியோரிடமிருந்து 31.10.2021 ம் தேதியின் படி வர வேண்டிய நிலுவைத்தொகை ரூ. 3,60,77,810.81/- (ரூபாய். மூன்று கோடியே அறுபது இலட்சத்து எழுபத்து ஏழாயிரத்து எட்னூற்று பத்து மற்றும் பைசா எண்பத்து ஒன்று மட்டும்) மற்றும் 01.11.2021 ம் தேதி முதல் ஒப்பந்த வீதத்தில் வசூலிக்கப்படும் வரை மேற்கொண்டு வரும் வட்டி, இதர செலவுகள் மற்றும் கட்டணங்கள்
3. M/s. பாவா ட்ரேடு லிங்க் (கடன்தாரர்), (2). திரு.ஸ்ரீனிவாசன் N.S (பங்குதாரர் / ஜாமீன்தாரர்), (3). திருமதி. S. சுசீலா (பங்குதாரர் / ஜாமீன்தாரர்), (4). திரு. A இர்ஃபான் ஹஃபீஸ் (பங்குதாரர் / ஜாமீன்தாரர்), (5). திருமதி. M ஹமீதா (ஜாமீன்தாரர்), (6). திருமதி P.S. ராஜலட்சுமி (ஜாமீன்தாரர்), (7). திரு. மொஹம்மத் இப்ராஹிம் (ஜாமீன்தாரர்) ஆகியோரிடமிருந்து 31.10.2021 ம் தேதியின் படி வர வேண்டிய நிலுவைத்தொகை ரூ. 6,34,72,884.94/- (ரூபாய். ஆறு கோடியே முப்பத்து நான்கு இலட்சத்து எழுபத்து இரண்டாயிரத்து எட்னூற்று எண்பத்து நான்கு மற்றும் பைசா தொண்ணூற்று நான்கு மட்டும்) மற்றும் 01.11.2021 ம் தேதி முதல் ஒப்பந்த வீதத்தில் வசூலிக்கப்படும் வரை மேற்கொண்டு வரும் வட்டி, இதர செலவுகள் மற்றும் கட்டணங்கள் ஆகியவற்றை வசூலிப்பதற்காக ''இருக்கின்ற இடத்தில்'' மற்றும் ''இருக்கின்ற நிலையில்'' மற்றும் ''இருக்கின்றவற்றுடன்'' என்ற அடிப்படையில் 10.12.2021 அன்று காலை 11.00 மணிக்கு விற்பனை செய்யப்படும்.
சொத்துக்களின் விபரம், ஜாமீன் சொத்துக்களுக்கான அடிப்படை விலை, டேவணித்தொகை மற்றும் விலைகோரலில் குறைந்தபட்ச அதிகரிப்பு தொகை ஆகியன கீழ்க்கண்டவாறு –

| வ. எண் | கணக்கு பெயர் | சொத்து விபரம் | அடிப்படை விலை (ரூபாயில்) | டேவணித் தொகை (ரூபாயில்) | விலைகோரலில் குறைந்தபட்ச அதிகரிப்பு தொகை (ரூபாயில்) |
|---|---|---|---|---|---|
| 1 | (1). M/s. லட்சுமி ராஜ் எண்டர்ப்ரைசஸ் (2). M/s. ஸ்ரீ வடிவுடையாள் எண்டர்ப்ரைசஸ் (3). M/s. பாவா ட்ரேடு லிங்க் (மேற்சொன்ன மூன்று கணக்குகளுக்குமான பொது ஜாமீன் சொத்துக்கள்) | சென்னை, கோட்டை – தண்டையார்பேட்டை தாலுக்கா, வ.உ.சி. நகர் டிவிஷன், ஆர் எஸ் எண். 11106, ப்ளாக் எண். 89 ல் அமையப்பெற்ற 3546 சதுர அடி பரப்பளவு கொண்ட இடம் மற்றும் அதனுடன் கூடிய 2430 சதுர அடி தரை தளம், 2430 சதுர அடி முதல் தளம் மற்றும் 2430 சதுர அடி இரண்டாவது தளம் ஆகியவற்றுடன் கூடிய கதவு எண். 14 ன் ஓர் பாகமாக உள்ள (பழைய எண். 8 & முன்பு கதவு எண். 12) பெரிய உத்தண்டி தெரு, கொத்தவால்சாவடி, ஜார்ஜ் டவுன், சென்னை – 600 001 என்ற முகவரியில் திரு. N.S. ஸ்ரீனிவாசன் பெயரில் உள்ள சொத்து மற்றும் அவற்றுடன் கூடிய சகல உரிமைகள் மற்றும் உடைமைகள் முழுவதும். எல்லைகளாவன - வடக்கு - R S எண். 11103 ல் உள்ள கன்னிகாபரமேஸ்வரி கோவிலுக்கு சொந்தமான கடை, தெற்கு - R S எண். 11111 ல் உள்ள பெரிய உத்தண்டி தெரு மற்றும் R S எண். 11107 ல் உள்ள சொத்து, கிழக்கு - R S எண். 11105 ல் உள்ள கல்யாண சுந்தர முதலியாரின் வீடு, மேற்கு - R S எண். 11107 ல் உள்ள A. தாயாரம்மாளின் வீடு | 5,50,80,000.00 (ரூபாய். ஐந்து கோடியே ஐம்பது இலட்சத்து எண்பதாயிரம் மட்டும்) | 55,08,000.00 (ரூபாய். ஐம்பத்து ஐந்து இலட்சத்து எட்டாயிரம் மட்டும்) | 1,00,000.00 (ரூபாய். ஒரு இலட்சம் மட்டும்) |
| 2 | (1). M/s. லட்சுமி ராஜ் எண்டர்ப்ரைசஸ் (2). M/s. ஸ்ரீ வடிவுடையாள் எண்டர்ப்ரைசஸ் (3). M/s. பாவா ட்ரேடு லிங்க் (மேற்சொன்ன மூன்று கணக்குகளுக்குமான பொது ஜாமீன் சொத்துக்கள்) | சென்னை, ஆயிரம் விளக்கு, க்ரீம்ஸ் சாலை, பழைய ஆர் எஸ் எண். 43/4, புதிய ஆர் எஸ் எண். 43/95, பழைய சர்வே எண். 95/96 மற்றும் 97 ல் அமையப்பெற்ற கதவு எண். 37/16, பழைய கதவு எண். 1/2 யைக்கொண்ட P M டவர்ஸ் - ன் 5 வது தளத்தில் உள்ள 1600 சதுர அடி (வரைபடத்தின் படி) 1617 சதுர அடி (உண்மையில்) உடன் கூடிய ஃப்ளாட் எண். 5A (822 சதுர அடி கட்டிட மேற்பரப்பு) மற்றும் ஃப்ளாட் எண். 5B (795 சதுர அடி கட்டிட மேற்பரப்பு) பரப்பளவு கொண்ட இடம் ஆகியவற்றுடன் 23127 சதுர அடியில் உள்ள 456 சதுர அடி பிரிபடாத பங்கு இடம் மற்றும் ஆகியவற்றுடன் திரு. N.S. ஸ்ரீனிவாசன் பெயரில் உள்ள சொத்து மற்றும் அவற்றுடன் கூடிய சகல உரிமைகள் மற்றும் உடைமைகள் முழுவதும். எல்லைகளாவன - 30 அடி சாலைக்கு - வடக்கு, சர்வே எண். 43/2 ல் உள்ள சொத்துக்கு - தெற்கு, க்ரீம்ஸ் சாலைக்கு - கிழக்கு, 1974 ன் லே அவுட் எண். 9 ல் உள்ள ப்ளாட் எண். 2 க்கு - மேற்கு | 96,30,000.00 (ரூபாய். தொண்ணூற்று ஆறு இலட்சத்து முப்பதாயிரம் மட்டும்) | 9,63,000.00 (ரூபாய். ஒன்பது இலட்சத்து அறுபத்து மூன்றாயிரம் மட்டும்) | 1,00,000.00 (ரூபாய். ஒரு இலட்சம் மட்டும்) |
| 3 | (1). M/s. லட்சுமி ராஜ் எண்டர்ப்ரைசஸ் (2). M/s. ஸ்ரீ வடிவுடையாள் எண்டர்ப்ரைசஸ் (3). M/s. பாவா ட்ரேடு லிங்க் (மேற்சொன்ன மூன்று கணக்குகளுக்குமான பொது ஜாமீன் சொத்துக்கள்) | திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் தாலுக்கா, ப்ரித்விபாக்கம், இரண்டாவது அவென்யூ சாலை, RS எண். 658, ப்ளாட் எண். 60 ல் அமையப்பெற்ற சண்முகம் ஃப்ளாட்ஸ், டைப் - B, முதல் தளத்திலுள்ள பொதுப்பரப்புடன் கூடிய 1045 சதுர அடி கட்டிட பரப்பு கொண்ட ஃப்ளாட் எண். F2 மற்றும் 2520 சதுர அடி பரப்பில் உள்ள 692 சதுர அடி பிரிபடாத பங்கு கொண்ட இடம் உள்ளிட்ட திருமதி. ஹமீதா பெயரில் உள்ள சொத்து. எல்லைகளாவன - M.S. நாகராஜனுக்கு சொந்தமான ப்ரித்விபாக்கம் ப்ளாட் எண். 80 க்கு - வடக்கு, 30 அடி அகல இரண்டாவது அவென்யூ சாலைக்கு - தெற்கு, ப்ரித்விபாக்கம், ப்ளாட் எண்.61க்கு - கிழக்கு, A அப்பாதுரையின் ப்ளாட் எண். 59க்கு - மேற்கு. | 32,40,000.00 (ரூபாய். முப்பத்து இரண்டு இலட்சத்து நாற்பதாயிரம் மட்டும்) | 3,24,000.00 (ரூபாய். மூன்று இலட்சத்து இருபத்து நான்காயிரம் மட்டும்) | 25,000.00 (ரூபாய். இருபத்து ஐந்தாயிரம் மட்டும்) |

| | |
|---|---|
| ஜாமீன் சொத்துக்கள் ஆய்வு தேதி | 01.12.2021 காலை 10.00 மணி முதல் மாலை 03.00 மணி வரை |
| ஆன்லைனில் விலைப்புள்ளி சமர்ப்பிக்க கடைசி தேதி | 09.12.2021 மாலை 03.00 மணிக்கு முன்பு |
| மின்னணு ஏல தேதி மற்றும் நேரம் | 10.12.2021 காலை 11.00 மணி முதல் பிற்பகல் 01.00 மணி வரை இதன் கீழ்க்குறிப்பிட்டுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளின் படி ஒவ்வொரு முறையும் எண்ணிலடங்கா 5 நிமிட நேர நீட்டிப்புடன். |
| ஏல வலைதளம் | https://sarfaesi.auctiontiger.net |

மின்னணு ஏல தேதி பொது விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டால், அத்தேதி தன்னியல்பாக அடுத்த வேலை நாளுக்கு நீட்டிக்கப்படும்.
விற்பனைக்கான விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு என்கோர் ARC ன் வலைதளமான www.encorearc.com மற்றும் https://sarfaesi.auctiontiger.net யை தயவு கூர்ந்து பார்வையிடுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.
விருப்பமுள்ள ஏலதாரர்கள் மேலும் ஏதேனும் தகவலுக்கு / விசாரணைக்கு, அதிகாரப்பூர்வ அலுவலர், என்கோர் ARC, திரு. B. M. நாகராஜு, அலைபேசி எண். 89399 56230 ; திரு. பத்மகுமார் S அலைபேசி எண். 97390 99360, திரு. K. நாகேந்திரன், அதிகாரப்பூர்வ அலுவலர், அலைபேசி - 91762 91717 மற்றும் திரு. மதன் அலைபேசி 91766 60082 ஆகியோரை தொடர்பு கொள்ளவும்.

தேதி: 18.11.2021
இடம்: சென்னை
அதிகாரப்பூர்வ அலுவலர்
என்கோர் அஸட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனி பிரைவேட் லிமிடெட்



बैंक ऑफ़ बड़ौदा
பாங்க் ஆஃப் பரோடா

சென்னை பெருநகர பிராந்திய அலுவலகம்
எண்.10, 2ம் தளம், சி.பி. ராமசாமி சாலை,
ஆழ்வார்பேட்டை, சென்னை-600018.
போன் : 044-23454329/23454307/23623001

அசையா சொத்துகளின் விற்பனைக்கான இ - ஏல அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை பத்திரமயமாக்குதல் மற்றும் நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 (SARFAESI Act 2002) விதிகளின் கீழ் விதி 6 (2) & 8 (6) இன் கீழ் வைக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்களை விற்பனை செய்தல்.
கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரர் மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிட்டுள்ள சொத்துகள் நிதி சொத்துக்களை பாதுகாத்தல் மற்றும் சீரமைத்தல் மற்றும் பிணை வட்டி அமலாக்க சட்டம் 2002 விதி 6 (2) & 8 (6) ன் கீழ் பாங்க் ஆஃப் பரோடா அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்களால் அடையாளப்பூர்வமான / நேரடியான சுவாதீனம் செய்யப்பட்ட கீழே உள்ள சொத்துக்கள் "எங்கு உள்ளதோ அப்படியே" "எப்படி உள்ளதோ அப்படியே" "என்ன இருக்கிறதோ அதே நிலையில்" என்ற அடிப்படையில் வங்கியில் பெறப்பட்ட கடனுக்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன் மற்றும் செலவுகளை திரும்பப் பெறும் நோக்கத்துடன் மின் ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர் ஜாமீன்தாரர் விவரம், நிலுவைத் தொகை, சொத்து விவரம், ரிசர்வ் விலை, மின்னணு ஏலத் தேதி மற்றும் நேரம், டேவணித் தொகை மற்றும் ஏல அதிகரிப்பு தொகை ஆகியவை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

கடன்தாரர் 1. M/s தி Z ஆக்சிஸ், உரிமையாளர் திரு. G. பிரதீப், LIC ஃப்ளாட்ஸ், முதல் தளம் எண். 29/9, மாதவன் நாயர் சாலை, மகாலிங்கபுரம், சென்னை - 600034. மற்றும் ஜாமீன்தாரர், 1. திருமதி. S. ஜெயலட்சுமி, H-16D, ஐஸ்வர்யா அபார்ட்மெண்ட்ஸ், கிழக்கு அவென்யூ, கொரட்டூர், சென்னை - 600080.
நிலுவைத் தொகை : 15.11.2021 தேதிப்படி ரூ.81,02,524.04/- மற்றும் வட்டி இதர கட்டணங்கள்.
அசையா சொத்து விவரம் வில்லங்கங்கள் ஏதேனும் இருப்பின்: சென்னை மாவட்டம் எழும்பூர் நுங்கம்பாக்கம் தாலுக்கா, நுங்கம்பாக்கம் கிராமம், முன்னர் பைமாஷ் எண்கள் 794, 805, மற்றும் 806 பகுதி, எண். 109ன் புலியூர் சோரிடோரியம் கிராமம், தற்போது R.S. எண். 622/1ன் பகுதி முன்னர் Rs. R.S. எண். 622ன் கதவு எண் 29 பழைய ஃப்ளாட் எண். 21, ஃப்ளாட் எண். 9, முதல் தளம் பிளாக் 2, பீமா உத்யோகி, LIC ஃப்ளாட்ஸ், மகாலிங்கபுரம், சென்னை - 600034ல் உள்ள மொத்தம் 4 கிரவுண்டு 580 சதுர அடி (10180 சதுர அடி) நிலத்தில் 854 சதுர அடி விஸ்தீரணத்துடன் 1/12ல் விகிதத்தில் பிரிந்தும் பிரிக்கப்படாத பங்கு நிலம் நிலத்தில் உரிமையுள்ள ஒரு முன்பதிவு செய்யப்பட்ட கார் நிறுத்தத்துடன் கூடிய நிலம் அதன் துண்டுகளும் பகுதிகளும். இச்சொத்து சென்னை மத்திய பதிவு மாவட்டம், ஆயிரம் விளக்கு இணை - II சார் பதிவு மாவட்டத்தில் உள்ளது. . (அடையாளப்பூர்வ சுவாதீனம்)
குறைந்த பட்ச நிர்ணய விலை : ரூ.74,00,000/- | டேவணித் தொகை : ரூ. 7,40,000/- | ஏலத் தொகையை அதிகரித்தல் : ரூ.50,000/-

கடன்தாரர்: திரு. மூர்த்தி P. இருப்பிட முகவரி: a) எண். 9A, திருவள்ளூர் 1வது தெரு, ராம்புரம், அம்பத்தூர், சென்னை - 600053 b) கதவு எண். 97, 2வது அவென்யூ, TNEB காலனி, மேனாம்பேடு, அம்பத்தூர், சென்னை - 600053. c) F-3, முதல் தளம், எண். 34B, 6வது பிளாக், MMDA காலனி, மதுரவாயல், சென்னை - 600094
நிலுவைத் தொகை : 04.10.2021 தேதிப்படி ரூ.27,73,588.39/- மற்றும் வட்டி இதர கட்டணங்கள்.
அசையா சொத்து விவரம் வில்லங்கங்கள் ஏதேனும் இருப்பின்: காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் தாலுக்கா, ஸ்ரீபெரும்புதூர் தாலுக்கா, பழைய கிராம எண். 103, புதிய எண். 51A-வின் நெமிலி கிராமம், சர்வே எண். 112/1B, பட்டா எண். 6425, பட்டாவில் உள்ளபடி புதிய சர்வே எண். 112/109ன் படி மனை எண். 45, VGP ஸ்ரீ சக்ரா டவுன், பகுதி - III-ல் உள்ள 1800 சதுர அடி நிலம். செங்கல்பட்டு பதிவு மாவட்டம் ஸ்ரீ பெரும்புதூர் சார்பதிவு மாவட்டத்தில் உள்ள சொத்தின் எல்லைகள் : வடக்கு : காலி நிலம், தெற்கு : 30 அடி சாலை, கிழக்கு : மனை எண். 46, மேற்கு : மனை எண். 44. அளவுகளில் : கிழக்கு மேற்கு வடக்குப்பகுதி 36 அடி, கிழக்கு மேற்கு தெற்குப்பகுதி 36 அடி, வடக்கு தெற்கு கிழக்குப்பகுதி 50 அடி, வடக்கு தெற்கு மேற்குப்பகுதி 50 அடி. ஆக மொத்தம் 1800 சதுர அடி கொண்ட நிலத்தின் அதன் துண்டுகளும் பகுதிகளும். (ஆக்கப்பூர்வ சுவாதீனம்)
குறைந்த பட்ச நிர்ணய விலை : ரூ.7,20,000/- | டேவணித் தொகை : ரூ. 72,000/- | ஏலத் தொகையை அதிகரித்தல் : ரூ.10,000/-

ஏலச் சொத்தினை பார்வையிட நாள் மற்றும் நேரம் :
06.12.2021 பகல் 11.00 மணி முதல் மாலை 03.00 மணி வரை
மின் ஏலத் தேதி மற்றும் நேரம் :
13.12.2021 மதியம் 2.00 மணி முதல் மாலை 06.00 மணி வரை

விற்பனை விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, கொடுக்கப்பட்டுள்ள இணைப்பை https://www.bankofbaroda.in/e-auction.htm and https://ibapi.in பார்க்கவும். மேலும் விலைக்குறிப்பீட்டாளர்கள் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, தொலைபேசி எண். 044-23454329/8124576123 தொடர்பு கொள்ளலாம்.

இடம் : சென்னை
தேதி : 19.11.2021
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
பாங்க் ஆஃப் பரோடா